**திம்புலாகல பிரதேச சபை**
**பொலன்னறுவ மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 18 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 19 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து திம்புலாகல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| களஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக முற்பணக் கணக்கு முறைமை ஒன்று கடைப்பிடித்திருக்கவில்லை. | களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமை கடைபிடிக்கப்பட வேண்டும். | முற்பணக் கணக்கு முறைமை ஒன்றை கடைபிடிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மின்சார உபகரணங்கள், நீர்க்குழாய் உபகரணங்கள் மற்றும் அடியிதழ் புத்தகங்கள் பெறுமதி ரூபா 131,592 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியான பெறுமதியினை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் நாட்குறிப்பு இலக்கங்கள் 02,03,04 மூலம் சரி செய்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான தகவல்கள் காணிப்பதிவாளர் நிறுவனத்தினால் இதுவரை தயாரித்திருக்க வில்லை என வாய்மூலம் அறிவித்த காரணத்தி னால் வருமானத்தை இனங்காண முடியாதுள்ளது. |
| (iii) | பொலன்னறுவை நீதிமன்றத்தில் இருந்து கிடைக்க வேண்டிய மீளாய்வாண்டு ஜனவரி மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான நீதிமன்ற தண்டப்பணம் சிட்டையிடலை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 திசெம்பர் மாதத்திற்கான அறிக்கை மாகாண வருமான திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை என தொலைபேசி மூலம் வினவிய போது அறிவிக்கப்பட்டது. |
| (iv) | மீளாய்வாண்டின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 60,001 ற்கான ஊழியர் பிணை வைப்பு மீதி ஒன்று கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகளில் சரி செய்வேன். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 43,514,522 தொகை எனினும், நிதி நிலைமைக்கூற்றின் படி அவை ரூபா 61,372,154 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 17,857,632 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | சரியான பெறுமதியினை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டின் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 50,206,035 தொகை எனினும், நிதி நிலைமைக்கூற்றின் படி அவை 44,088,355 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 6,117,680 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | சரியான பெறுமதியினை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டின் கணக்குகளில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 9,802,828 தொகை எனினும், நிதி நிலைமைக்கூற்றின் படி அவை ரூபா 8,982,653 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 820,175 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | சரியான பெறுமதியினை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பரிசோதனை மேற்கொண்டு மிகவும் சரியான மீதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி வருமான கடன்பட்டோர் மீதி ரூபா 651,015 தொகை எனினும், நிதி நிலைமைக்கூற்றின் படி அது ரூபா 1,311,015 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 660,000 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களுடன் சரியான அட்டவணை சமர்ப்பிக்க வேண்டும். | 2019 ஆண்டிற்கான உள்ளூராட்சி நிறுவனத்தின் பெறவேண்டிய சபை அமர்வுப்படி மீதியொன்றாகும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்ற ாடல் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 23(அ) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய கைத்தொழில்களை இனங்கண்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு அனுமதிப்பத்திரம் வழங்கவேண்டும். | 2020 ஆண்டில் அவ்விடயத்திற்கு பொறுத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்து பொறுத்தமான நடைமுறைப்படி அனுமதிப்பத்திரம் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| விதி 59 – 63 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு கைத்தொழில் | வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு | 2020 ஆணடு முதல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| மற்றும் வர்த்தக முயற்சிகள் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | அட்டவணை தயாரித்து அதன்படி கட்டணம் அறவிடப்பட வேண்டும். | |

**1.5 பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 01 வருடம் முதல் 09 வருடங்கள் வரையான காலங்கள் வரை காணப்படுகின்ற 13 கடையறைகள் தொடர்பான நிலுவை கடையறை வாடகை ரூபா 266,660 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 08 கடையறைகளின் உடன்படிக்கைகள் மற்றும் ஆவனங்கள் காணப்படாமையால் சிக்கல் தன்மையுள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. 02 கடையறைகளுக்காக 2019 திசெம்பர் 24 திகதி பொதுக்கூட்ட தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டுள்ளேன். 03 கடையறைகள் மூடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நபர்களை கண்டுபிடிக்க முடியாதுள்ளது. |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டுவரும் 2010 ஆண்டு முதல் 2013 வரையான காலப்பகுதிக்கான கூட்டுத்தொகை ரூபா 953,250 வாராந்தச் சந்தை வாடகை வருமானத்தை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 15,000 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கண்டறியும் படி வருமான பரிசோதக உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. அவர்களின் பரிந்துரையின் படி தொடர் நடவடிககை மேற்கொள்ளப்படும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 903,111 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,869,164 தொகையாக காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 32,264,984 | 38,153,624 | 38,880,216 | 8,982,653 | 23,561,440 | 23,252,875 | 21,989,794 | 9,709,245 |
| (ii) | வாடகை | 8,017,655 | 4,659,317 | 3,083,698 | 2,538,565 | 7,874,700 | 3,989,520 | 3,360,008 | 1,384,067 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 528,000 | 344,930 | 470,030 | 2,059,679 | 528,000 | 534,670 | 439,670 | 2,160,779 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 22,379,250 | 15,319,106 | 23,019,449 | 16,685,082 | 14,988,550 | 16,806,291 | 6,161,362 | 24,305,423 |
| | மொத்தம் | 63,189,889 | 58,476,977 | 65,453,393 | 30,265,979 | 46,952,690 | 44,583,356 | 31,950,834 | 37,559,514 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயற்படுத்தப்படும் 04 நீர் செயற்திட்டங்களில் நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 8,982,653 தொகையாகும். | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை நீர்க் கட்டண வருமானத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 2,538,565 தொகையாக காணப்பட்டதுடன், அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 83 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை சந்தை வாடகை மற்றும் கடை வாடகை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்துள்ளது. இந்த நிலுவைத் தொகைகளை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதான செயலாளரிடம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 15,211,215 தொகை ஆகும். 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 835,502 தொகையாக காணப்பட்டதுடன், 2019 ஆண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கும், இனங்காணப்படாத வருமானத்தை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2020 மே 26 திகதி அளவில் அறிக்கை தயாரித்திருக்கவில்லை எனவும் குறிப்பிட்ட தகவல்களை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட பதிவாளர் அலுவலகம் தொலைபேசி மூலம் அறிவித்திருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1987 இன் பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முறையான திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலை திட்டமொன்று தொடர்பாக சபையின் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உக்காத குப்பை மீள்சுழற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க | இலங்கை மகாவெலி அதிகார சபைக்கு மற்றும் ஏனைய பொறுப்புடைய நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியிருந்த போதிலும் இது வரை அதற்காக எதுவித பதிலும் கிடைத்திருக்கவில்லை. பொருத்தமான காணி ஒன்று கிடைத்தவுடன் இது |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டும். | தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| | ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் அந்த குறிக்கோள்களை அளவீடு செய்வதற்காக குறிகாட்டிகள் இனங்கண்டிருந்த போதிலும், அவற்றை செயற்படுத்தியிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். | இது தொடர்பாக செயற்படுத்துவற்கு தேவையான அலுவல்கள் 2020 ஆண்டு முதல் மேற்கொள் வதற்காக கருணையுடன் அறிவிக்கின்றேன. |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆண்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிர்மாண வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த அரலகங்வில வாராந்த சந்தை வளவில் கடையறைகள் தொடர்பாக ஆக்கபூர்வமான தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு சபைக்கு இயலாதுள்ளது. | ஆக்கபூர்வமான பயன்படுத்தக்கூடிய விதமாக செயற்படுத்த வேண்டும். | சபை நிதியத்தை பயன்படுத்தி கட்டம் கட்டமாக இந்த வேலையை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | சபை அலுவல்கள் தொடர்பாக நடாத்தப்படுகின்ற வழக்கு அலுவல்கள் தொடர்பாக தகவல்கள் சபையில் காணப்படவில்லை. | வழக்குகள் தொடர்பாக பதிவேடுகள் ஒன்று மற்றும் வழக்கு கோவைகள் பேணப்பட வேண்டும். | வழக்கு பதிவேடு மற்றும் கோவைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த வழக்கு விசாரணை நடைபெறும் நாட்களில் சபையின் உத்தியோகத்தர் ஒருவரை மற்றும் சட்டவரைஞர் ஒருவரை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை தெளிவாக இனங்காணக்கூடிய விதமான நிர்மாண வேலைப்பதிவேடு, நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்காததுடன், நிர்மாண வேலை வைப்பு மீதி வைப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில் பதிவு செய்யப்படாமல் தீர்க்கும் | நிர்மாண வேலைக் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மற்றும் நிர்மாண வேலைப்பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட வேண்டியதுடன், நிர்மாண வேலை வைப்புக்கள், வைப்புச் செய்யப்படும் | பதிவேடுகளை சரி செய்து நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்படுவதற்கு 2020 ஆண்டு முதல் உரிய விடய எழுதுனர்களுக்கு அறிவித்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | சந்தர்ப்பத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். | |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் | | |
| | சபையின் செயலாளர் பதவிக்காக பதில் கடமை நியமனம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. இரண்டாம் மட்ட 06 பதவிக்காக ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தது. ஆரம்ப பதவியணியில் 26 ஊழியர்கள் மிகையாக காணப்பட்டிருந்தது. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போதுள்ள பதில் கடமையாற்றும் செயலாளருக்கு முறையான நியமனக் கடிதம் வழங்கும் படி விண்ணப்பித்துள்ளோம். காணப்படும் பதவியணி பற்றாக் குறைகளை தவிர்த்துக் கொள்வதற்காக அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப் பட்டது. சபையில் போதியளவு பதவியணியினர் காணப்படாமை தொடர்பாக 2019 ஜுலை 11 திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி நி.பி. 71 இன் கீழ் பதவியணிக்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| (ஆ) | சிக்கனமற்ற செலவுகள் | | |
| | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் சேவைக்காக இணைக்கப்பட்டிருந்த ஊழியர் ஒருவருக்கு திம்புலாகல பிரதேச சபையினால் எதுவித சேவையும் பெற்றுக்கொள்ளாமல் சம்பளம் மற்றும் படியாக ரூபா 946,728 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சபையினால் சம்பளம் செலுத்தப்படுதல் இடைநிறுத்தப்பட வேண்டும். | வடமத்திய முதலமைச்சுச் செயலாளர் NCP/CM/ ED/03/01/பிச/பொது மற்றும் 2019 ஜுலை 29 திகதிய கடிதத்தின் கட்டளையின் படி வீதிப் பயணிகள் போக்கு வரத்து அதிகார சபைக்கு இணைக்கப்பட்டிருந்தது. |
| (இ) | ஊழியர் கடன் | | |
| | உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 159,755 தொகை பெறுமதியான ஊழியர் கடன் மீதியொன்றினை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | கடன்பட்டோர் அல்லது பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் தொடர்பாக பிணையாளர்கள் மற்றும் உரிய தகவல்கள் இன்மையால், சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் கடனை அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | முடியாதென அறிவிக்கின்றேன். இறந்த உத்தியோகத்தர்களின் மீதி மரண பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காப்புக் காணி ஒன்றில் நடாத்தப்பட்டு வருகின்ற கலுகெலே வாராந்த சந்தையின் உரிமை சபையிடம் காணப்படாமையினால் அபிவிருத்தி செய்து வருமானம் உழைப்பதற்கான கருமங்களில் ஈடுபடுத்த முடியாதுள்ளது. | உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்து வருமானம் உழைக்கும் கருமங்களில் பங்களிப்பு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இலங்கை மகாவெலி அதிகார சபையிடம் விண்ணப்பித்து பொறுத்தமான காணி ஒதுக்கப்படும் வரை வருமான நிருவாக உத்தியோகத்தர் மூலம் வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 2018 ஆண்டின் போது வருமான நிருவாகி மூலம் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக பெறுமதி மதிப்பீட்டு மீது கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | முறையான பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடப்பட வேண்டும். | உரிமையை உரித்தாக்கிய பின்னர் முறையாக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | தொலைபேசி தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 33,000 இற்கான தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட கட்டணத்தை அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (ஈ) | பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் காணப்படும் முன்னேற்றப்பட்ட பிரதேசங் களை இனங்கண்டிருந்த போதிலும் வீதவரி அறவீடு செய்வதற்குரிய தொடர் செயல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி அறவீடு செய்வதற்கான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரைபுகளை அங்கீகரித்தல் தொடர்பாக தகவல்கள் சபைக்கு சமர்பிக்கப்பட்டு உள்ளுராட்சி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கருணையுடன் அறிவிக்கின்றேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான அரலகங்வில வாராந்த சந்தை வளவில் காணப்படும் நன்னீர் மீன் கடையறையில் இருந்து 2019 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட வேண்டிய கட்டணம் மற்றும் வாடகை ரூபா 1,493,068 தொகையினை அறவீடு செய்வதற்கு மற்றும் தொடர் சட்ட செயற்பாடுகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறையின் உரிமையை பாதுகாப்பதற்கும் மற்றும் நிலுவை வாடகை தொடகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். | இது தொடர்பாக விசாரணை உத்தியோகத்தரினால் வழங்கியிருந்த அறிக்கையின் படி தேவையான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளன. |

**3.6 புலப்படக்கூடிய முறைகேடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | வருமானப் பரிசோதகர் ஒருவரினால் வெளிக்களத்தில் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் சேகரிப்பதற்கான 100 பற்றுச்சீட்டுக்களைக் கொண்ட 02 பற்றுச்சீட்டுப் புத்தகங்களை திருப்பி ஒப்படைக்காமையால் சபையின் பதிவேடுகளில் நிலுவையாக காட்டப்பட்டிருந்துடன், இது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று 2019 திசெம்பர் 31 திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றப்பத்திரம் அனுப்பப்பட்டு வடமத்திய உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | 2016 ஜூன் முதல் 2017 ஜூன் 28 வரையான காலப்பகுதியில் நீர் கட்டணம் அளவீடு செய்யப்படும் போது பெறுவனவு பற்றுச்சீட்டுக்களில் மூலப் பிரதியில் குறிப்பிட்டுள்ள தொகையை விட குறைவாக இரண்டாம் பிரதியில் குறிப்பிட்டு ரூபா 2,625,660 தொகை கையாடல் மேற்கொள்ளல் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். | ஆரம்ப விசாரணை வடமத்திய உள்ளூராட்சி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. விசாரணையை துரிதப்படுத்தும் படி 2020.05.21 திகதி கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நீர் செயற்திட்ட அலுவலகத்தினால் நீர் நுகர்வோரிடம் அறவீடு செய்வதற்காக பயன்படுத்தப்படும் இலக்கம் 53951-54000 வரையான பெறுவனவு பற்றுச் சீட்டுப் புத்தகம் காணாமல் போனது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணாமல் போயுள்ள புத்தகம் மற்றும் அதற்கான பணம் அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பான உத்தியோகத்தர் தற்போது இடமாற்றம் பெற்று சென்றுள்ளமையால் இது தொடர்பாக கண்டறிந்து ஒரு மாதத்திற்குள் அறிக்கை ஒன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிமேல் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் வழங்கியுள்ள அறிவுறைகளின் படி பொறுப்புச் சொல்ல வேண்டிய பிரிவுகளுக்கு அனுப்புவதற்கும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்கின்றேன். |

**4.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 திசெம்பர் 16 திகதி சபைக்கு கிடைத்திருந்த 360 கல்வனைஸ் கொடிக் கம்பங்கள் முன்னைய தலைவர் மற்றும் 05 மந்திரிமார்களுக்கு வழங்கப் பட்டு 05 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்துள்ள போதிலும் அவற்றை சபைக்கு திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப் பண்டங்களை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச கணக்குக் குழுவின் விதர்ப்புரையை செயற்படுத்து வதற்கு ஆரம்ப விசாரணையின் மூலம் விடயங்களை உறுதிப்படுத்திய பின்னர் செயற்படுமாறு அறிவுறை வழங்கும் படி வடமத்திய உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவித்துள்ளேன். |
| (ஆ) | 2015 பெப்ரவரி 20 திகதி கொள்வனவு செய்திருந்த சபையின் சொத்தென பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள டெல் இன மடிக் கணினி மற்றும் iPad 01 முன்னைய பிரதேச சபை மந்திரிமார் இருவருக்கு விநியோகிக்கப்பட்டு 4½ வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அவற்றை சபைக்கு மீள் பெற்றிருக்கவில்லை. | குறிப்பிட்ட நபர்களிடம் உபகரணங்கள் அல்லது அதன் பெறுமதியை திருப்ப பெறவேண்டும். | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளேன். |